සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

இரண்டாம் தவணைப் பரீட்சை 2018 தரம் 06
දෙවන වාර පරීක්ෂණය 2018 06 ශ්‍රේණිය
Second Term Test 2018 Grade 06

විද්‍යාව I -II
விஞ்ஞானம் I- II
Science I- II

Two hour
இரண்டு மணித்தியாலயம்
පැය දෙකයි

சுட்டெண்:……………………………………………………………………

பகுதி - I

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
- மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

1. நீரின் திண்ம நிலை

i. கிளெசியர் ii. நீராவி
iii. கிணற்றுநீர் iv. கொதிநீராவி

2. திணிவை அளக்கும் சர்வதேச அலகு

i. kg ii. mm
iii. km iv. g

3. அங்கிகளின் தொடர்ச்சியான நிலவுகைக்கு அவசியமானது

i. இனப்பெருக்கம் ii. வளர்ச்சி
iii. அசைவு iv. போசணை

4. நீரின் உவர்திறன் அதிகரிக்கும் ஒழுங்கில் தரப்பட்டுள்ளது

1. நன்னீர், சவர்நீர், உவர்நீர்
2. உவர்நீர், சவர்நீர், நன்னீர்
3. உவர்நீர், நன்னீர், சவர்நீர்
4. நன்னீர், சவர்நீர், உவர்நீர்


5. கறியுப்பினுடைய இராசாயனப் பெயராவது,
1 .சோடியம் சல்பேற்று
2. சோடியம் ஐதரொட்சைட்டு
3. அமோனியம் குளோரைட்டு
4. சோடியம் குளோரைட்டு

6. திசைகாட்டி தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A – காந்த புலத்தை இனங்காணப் பயன்படும்
B – காந்த ஊசி எப்பொழுதும் வடக்கு தெற்காக ஓய்வடையும்
C – விமானவோட்டி மாலுமிகள் பயணத் திசையை அறியப் பயன்படும்
மேலே தரப்பட்டவற்றுள் சரியானது

1. A மட்டும் 2. Aயும் Cயும்
3. A,B மட்டும் 4. A,B,C யாவும்



kalvi.lk

7.  பெற்றிக் கிண்ணம்

தெளிந்த சுண்ணாம்பு நீர்

பெற்றிக் கிண்ணத்தில் தெளிந்த சுண்ணாம்பு நீரிட்டு சில மணித்தியாலங்கள் மேசையின் மேல் வைக்கப்பட்டது. சுண்ணாம்பு நீர் பால் நிறமாகியது.

இதிலிருந்து வரக்கூடிய முடிவு யாது?

1. வளியில் காபனீரொட்சைட்டு வாயு உள்ளது.
2. வளியில் ஒட்சிசன் வாயு உள்ளது.
3. வளியில் நைதரசன் வாயு உள்ளது.
4. வளியில் ஐதரசன் வாயு உள்ளது.

8. வைக்கோல் ஊறவைத்த நீரில் காணப்படும் பரமீசியம் நுண்ணங்கியை அவதானிக்க ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்பட்ட உபகரணம்

1. எளிய நுணுக்குக் காட்டி
2. தொலைகாட்டி
3. குழிவாடி
4. கூட்டுநுணுக்குக் காட்டி

9. திணிவைக் கொண்டிராத இடத்தை நிரப்பாதவை


1. நுண்ணங்கி
ii. திண்மம்
iii. வாயு
iv. சக்தி


10. பின்வருவனவற்றுள் கடினத்தன்மை கூடிய திரவியம்


1. வைரம்
ii. கண்ணாடி
iii. பூசல்மா
iv. கரி


Education கல்வி

11. நான்கு சட்டக்காந்தங்களின் கவர்ச்சி விசையை காண்பதற்காக இரும்பாணிகளைப் பயன்படுத்தி மாணவர் குழு மேற்கொண்ட செயற்பாடு கீழே தரப்பட்டுள்ளது. கூடுதலான கவர்ச்சி விசையை காட்டும் அமைப்பு எது?

1. 


2. 


3. 


4. 




kalvi.lk

12. ஒலி தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன

a. பறவைகளின் ஓசை இயற்கை ஒலியாகும்
b. புல்லாங்குழல் ஓசை இயற்கை ஒலியகதும்
c. பேரூந்தின் ஒலி செயற்கை ஒலியாகும்


மேலே தரப்பட்டுள்ள கூற்றுகளில் சரியானது

1. A மட்டும்
2. Aயும் Cயும்
3. Aயும் Bயும்
4. A,B,C யாவும்

13. விரைவில் தீர்ந்து போகக்கூடிய சக்தி முதல்

1. உயர் திணிவு
2. புவிவெப்பம்
3. வற்றுபெருக்கு
4. உயிர்சுவட்டு எரிபொருள்

14.




ஓய்விலுள்ள காந்தம் A யின் அருகே காந்தம் B யை கொண்டுவரும்போது நடைபெறுவது

1. காந்தம் A காந்தம் Bயை நோக்கி கவரப்படும்
ii. காந்தம் B காந்தம் Aயை நோக்கி கவரப்படும்
iii .காந்தம் Aயும் Bயும் ஒன்றையொன்று தள்ளும்
iv. எவ்வித மாற்றமும் நிகழாது.

15. இலங்கையில் நிலக்கரி பயன்படுத்தப்படும் அனல் மின்வலு நிலையம் அமைந்திருப்பது

1. கொழும்பு
ii. நுரைச்சோலை
iii. லக்சபான
iv. கொத்மலை



kalvi.lk

16. முயல் தனது செவிச்சோனைகளை அடிக்கடி திருப்புவதை மாணவன் அவதானித்தான். இதற்கு காரணமாக அமைவது


1. பழக்கத்தின் காரணமாக
2. ஒலியைப் பெற்றுக் கொள்வதற்காக
3. ஈக்களை விரட்டுவதற்காக
4. காற்றுவீசும் திசையை அறிந்து கொள்வதற்காக

17.பிழையான கூற்றை தெரிவு செய்க

1. தாவரங்களில் பச்சையம் எனும் நிறப்பொருள் காணப்படுகிறது.
ii. தாவரங்கள் இடம்பெயராததோடு எவ்வித அசைவையும் காட்டுவதில்லை.
iii. விலங்குகளின் ஆயட்காலம் எல்லைக்குட்பட்டது.
iv. விலங்குகள் பிறபோசனிகளாகும்

13. 18.

ப




ஒலிக்கதிரின் பயணப்பாதையை அவதானிப்பதற்காக அமைக்கப்பட்ட சவர்க்கார நீரால் நிரப்பப்பட்ட போத்தலின் படம் அருகில் தரப்பட்டுள்ளது. சவர்க்கார நீர் நிரப்பப்படக் காரணம்

1. ஒளி புகாத் தன்மையை ஏற்படுத்த
ii. ஒளி புகும்தன்மயை ஏற்படுத்த
iii. ஒளி கசியும் தன்மையை ஏற்படுத்த
iv. வழுவழுப்பை ஏற்படுத்த



kalvi.lk

19. சரியான கூற்றை தெரிவு செய்க

1. ஒலி அதிகரிக்கும்போது இசை ஒலியும் இடையூறை ஏற்படுத்தும்

ii. சத்தத்தினால் செவிகளுக்கு பாதிப்பு ஏற்ப.டுவதில்லை

iii. நாம் கேக்கும் ஒலிகள் யாவும் இயற்கை ஒலிகளாகும்

iv. காதினுள் பிறபொருள்களை போடுவதால் பாதிப்பு ஏற்படாது

20. இலங்கையில் மழைவீழ்ச்சி குறைவான காலத்தில் இரவு 7.00-9.00 மணிவரை மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது. இந்நேர இடைவெளியில் மின்வெட்டு அமுல்படுத்தக் காரணம்

1. மக்கள் விரைவாக நித்திரைக்குச் செல்வதற்கு

ii. அக்காலத்தில் மின்னை உற்பத்தி செய்வதற்கு

iii. மின்சார ஊழியர்களின் வேலையை இலகுவாக்குவதற்கு

iv. இக்கால இடைவெளியில் மின்பாவனை அதிகமாக இருப்பதால்


Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

பகுதி II

01) a. தரம் ஆறு மாணவர்கள் காந்தத்தை பயன்படுத்தி தயாரித்த பட்டம் கீழே காட்டப்பட்டுள்ளது. இங்கு காந்தத்தை பட்டத்தின் அருகே கொண்டு செல்ல பட்டம் உயர்ந்தது.




செய்முறை – 01

செய்முறை - 02

1. பட்டத்தின் கம்பிகள் எவ்வுலோகத்தினால் ஆக்கப்பட்டுள்ளன?
2. இரண்டாவது சந்தர்ப்பத்தில் பட்டம் உயர்ந்தமைக்கான காரணத்தை விளக்குக.
3. இரண்டாவது சந்தர்ப்பத்தில் நூலை வெட்டிவிட்டால் உமது அவதானம் யாது?
4. சட்டக்காந்தத்தை வரைந்து அதில் காந்த விசைகோடுகள் பரவியுள்ள முறையை வரைக.
5. நீங்கள் அறிந்த காந்த வகைகள் மூன்றைக் குறிப்பிடுக.

b. 1. சக்தி முதல் என்றால் என்ன?
2. சக்தி முதல்கள் இரண்டைக் குறிப்பிடுக.
3. சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்த வீட்டில் நீர் கையாளும் வழிமுறைகள் இரண்டைக் குறிப்பிடுக.

02) அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.


கேட்டலுக்கான புலனங்கம் ……………………….. ஆகும். …………………….மூலம் ஒலி பிறப்பிக்கப்படுகிறது. எமக்கு கேட்கும் …………………………. ஏற்ப ஒலிக்காத ஒலி ……………………. எனப்படும். …………………………… ஏற்ப ஒலிப்பது ……………….. எனப்படும். சூழலில் கேட்கும் ஒலிகளை ………………………. , செயற்கை ஒலி என இருவகைப்படுத்தலாம். ஒலியை பிறப்பிக்கும் பொருட்கள் …………………………….. என அழைக்கப்படுகின்றன. புல்லாங்குழலில் ஒலி பிறப்பிக்கப்படுவது …………………………. அதிர்வதாலாகும். கிடாரில் ஒலி தோற்றுவிக்கப்படும் முறையில்……………………… ஒலி பிறப்பிக்கப்படுகிறது. றபானில் ஒலி பிறப்பிக்கப்படும் முறையில் ……………………… ஒலி பிறப்பிக்கப்படுகிறது.

( இயற்கை ஒலி, சந்தத்திற்கு, காது, இசை, அதிர்வு, சத்தம், வயலின், ஒலிமுதல், மேளம், வளிநிரல் )



kalvi.lk

03) மழைவீழ்ச்சி மூலம் நிலத்தை அடையும் நீரின் நடத்தையை அவதானிப்பதற்காக ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு கீழே தரப்பட்டுள்ளது.




I. மேலே தரப்பட்டுள்ள படத்தில் A,B,C எனக் குறிப்பிடப்பட்டுள்ள நீர் மூலங்களை இனங்காண்க.

II. A எனக் குறிப்பிடப்பட்டுள்ள நீர் மூலத்திற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

III. Bயிலுள்ள நீரை பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகள் இரண்டைத் தருக.

IV. பாடசாலையிலும் வீட்டிலும் நீர் வீண்விரயமாகும் இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு அதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை எழுதுக.

V. வரையறுக்கப்பட்ட வளமான நீர் மனித செயற்பாடுகளால் மாசடைகிறது. இவ்வாறு நீர் மாசடையும் இரு முறைகளை எழுதுக.

04) பொருத்தமானவற்றை இணைக்க

| A | B |
|---|---|
| i. அங்கிகள் சுவாசிக்கும் போது வெளிவிடும் வாயு | சுவாசம் |
| ii. ஒளித்தொகுப்பின் பக்கவிளைவு | கடல்அனிமனி |
| iii. தமக்குத் தேவையான உணவை தாமே உற்பத்தி செய்பவை | மாமரம் |
| iv. உணவுக்காக நேரடியாகவோ மறைமுகமாகவோ தாவரத்தில் தங்கியிருப்பவை | தற்போசனி |
| v. உடலில் சக்தியை பிறப்பிக்கும் செயற்பாடு | ஒட்சிசன் |
| vi. இடம்பெயரமுடியாத ஆனால் அசைவைக் காட்டும் விலங்கு | பிறபோசனி |
| vii.ஆயட்காலம் முழுக்க வளர்ச்சியடைவது. | காபனீரொட்சைட் |



kalvi.lk

b. கீழ்வரும் அங்கிகளை இணைக்கவர்ச் சுட்டி மூலம் பாகுபடுத்துக.

வண்ணத்துப் பூச்சி, நத்தை, பாம்பு, முயல், காகம்

05) கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (ஓ) எனவும் குறிப்பிடுக.

i. ஒளித்தொகுப்பிற்கு தேவையான சக்தி சூரியஒளி மூலம் பெறப்படுகிறது. ( )

ii. ஒளிக்கற்றை அம்புக்குறி ஒன்றின் மூலம் காட்டப்படும் ( )

iii. ( )

iv. ஒளிபுகாப்பொருளினூடாக ஒளி ஓரளவு பயணஞ் செய்யும். ( )

v. மருத்துவத்துறையில் உடலின் உள்ளுறுப்புக்களை அவதானிப்பதற்கு என்டஸ்கோப் உபகரணம் பயன்படுத்தப்படும். ( )

vi. மெல்லிய கண்ணாடி ஒளி ஊடுபுகவிடும் பதார்த்தமாகும். ( )

vii. நீர் மின்வலு நிலையங்களில் நீரில் அடங்கியுள்ள சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யப்படுகிறது. ( )


viii. சூரிய ஒளியில் வைக்கப்பட்ட சூரிய அடுப்பினுள்ளே உள்ள வெப்பநிலையை விட சூழலிலுள்ள வெப்பநிலை அதிகமாகும் ( )

ix. தேன்பாணி நிலையான வடிவமற்ற திட்டமான கனவளவைக் கொண்ட பதார்த்தமாகும் ( )

x. பனி நன்கு ஒளியை ஊடுபுகவிடும் பதார்த்தமாகும். ( )

xi. மின்குமிழ் ஒளியை வெளிவிடும் பொருளாகும் ( )

06) a. வாயுவின் இயல்பொன்றை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடொன்றின் படம் கீழே தரப்பட்டுள்ளது.






kalvi.lk

i. செயற்பாட்டின் ஆரம்பத்தில் மீற்றர் கோலின் அமைவு எவ்வாறாக இருக்க வேண்டும்?
ii. ஒரு பலூனை துளையிடும் போது அமைப்பில் ஏற்படும் மாற்றம் யாது?
iii. அவதானிப்பிற்கான காரணத்தைத் தருக.
iv. மேற்படி செயற்பாட்டிலிருந்து நீர் பெறும் முடிவு யாது?

b. அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

i. திணிவைக் கொண்டதும் இடத்தை நிரப்புவதுமானவை ……………………………. (சடப்பொருட்கள்.·.சக்தி) எனப்படும்.


ii. நொருங்கும் தன்மையுள்ள பொருள் ……………………… (கரித்துண்டு.·.செப்புக்கம்பி).

iii. உலோகமொன்றை தட்டித் தகடாக்கும் இயல்பு ………………………………. (நீட்டத்தகு இயல்பு.·.வட்டத்தகு இயல்பு) என அழைக்கப்படும்.

iv. ஆய்வுகூடத்தில் திரவக்கனவளவை அளப்பதற்கு……………………… (அளவுச்சாடி.·.பரிசோதனைகுழாய்) பயன்படுத்தப்படும்.

07) அங்கிகளின் இயல்புகள் பற்றி அறிவதற்கு வித்தை நட்டு முளைக்க வைப்பதற்கான செயற்பாடு ஒன்றை வகுப்பறையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. உமக்கு உலர்ந்த பயற்றம்வித்து, மாவித்து, எழுமிச்சை வித்து என்பன தரப்பட்டுள்ளன.

i. மேற்படி செயற்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடிய இரு வித்துக்களைக் குறிப்பிடுக.
ii. வித்தை நடுவதற்கு முன் நீர் மேற்கொண்ட நடவடிக்கை யாது?
iii.




a. மேற்படி செயற்பாட்டிற்கு உகந்த பாத்திரம் எது?
b. உமது விடைக்கான காரணத்தைத் தருக?

iv. அங்கியின் எவ்வியல்பை அறிவதற்காக மேற்படி செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.
v. மேற்படி செயற்பாட்டில் நீர் பெற்றுக்கொண்ட அளவீடுகள் இரண்டைக் குறிப்பிடுக?
vi. மாணவன் ஒருவன் சாடியுடன் கூடிய தாவரத்தை அறையின் யன்னலுக்கு அருகே வைத்து சில நாட்களின் பின் அவதானித்தபோது தாவரம் வளைந்திருந்தது.

a. தாவரம் அறையை நோக்கியா? அல்லது யன்னலை நோக்கியா? வளைந்திருக்கும்
b. இந்த அவதானிப்பிற்கு காரணமான அங்கிகளின் இயல்பை குறிப்பிடுக.



kalvi.lk

# GRADE 6,7,8

# STUDY WITH US..!
# MATHS
## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page